அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு 2024/2025

## தமிழ் - ஆண்டு 4

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

ஓர் அழகிய குளத்தில் சிறிய மீன்கள் நீந்துகின்றன. குளத்தைச் சுற்றி வண்ண வண்ண மலர்கள் நிறைந்து காணப்படுகின்றன. அவற்றிலே தேன் குடிக்கும் வண்ணத்துப் பூச்சிகள் பறந்து திரிகின்றன. குளத்தில் நீர்ப்பூக்கள் மலர்ந்திருக்கின்றன. மாறனும் அப்பாவும் குளத்தில் மீன் பிடிக்கச் செல்கின்றனர். மாறன் வண்ணத்துப் பூச்சிகளைப் பிடித்து விளையாடுகிறான். அப்பா தூண்டில் போட்டு மீன்களைப் பிடிக்கிறார். அதைக் கண்ட மாறன் அப்பாவுடன் தானும் மீன் பிடிக்கத் தொடங்கினான்.